**O.S. 55/2018, 27.10.2021, 02.35 pm - 02.50 pm**

**வா.சா.1, வெங்கடாசலம், த/பெ.பெருமாள் நாயுடு**

சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

என்னுடைய தந்தைக்கு யார் கிரையம் கொடுத்தார்கள் என்றால் ராஜவேல் கொடுத்தார். ராஜவேல் எவ்வளவு சொத்து கிரையம் வாங்கியுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் 33 செண்ட் வாங்கியுள்ளார். சர்வே எண்.263/15ல் எவ்வளவு சொத்து கிரையம் வாங்கினார் என்றால் 3 செண்ட் வாங்கினார். சர்வே எண்.263/15ல் ராஜவேல் எவ்வளவு கிரையம் வாங்கியுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ராஜவேல் சர்வே எண்.263/15ல் 2.5 செண்ட் நிலம் தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றும், நாங்கள் 3 செண்ட் கிரையம் வாங்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ராஜவேலுக்கு உரிமையில்லாத சொத்தை 3 செண்ட் நிலத்தை எழுதி கொடுத்தது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.263/20ல் 33 செண்டில் 19 செண்ட் நிலம் வாங்கியுள்ளதாக கூறியுள்ளேன் மீதமுள்ள சொத்தை யார் வாங்கியுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அசல் வழக்கு எண். 58/2017ல் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை பார்வையிடும்போது நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் இல்லை. நான் 10ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். 31.10.2003 தேதியில் எனது தகப்பனார் கிரையம் பெற்ற தேதியிலிருந்து எங்கள் சொத்தை அவர் இறந்த பிறகு நான் தான் சர்வே எண்.263/15, 263/20 அனுபவித்து வருகிறேன் என்றும், எனக்கு அறிவிப்பு கொடுக்காமல் அளப்பதற்கு ஆட்சேபனை உள்ளது என்று ஆட்சேபனை கடிதம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆட்சேபனை கொடுத்துவிட்டு தற்பொழுது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அதிலிருந்து தவறாக கிரையம் பெற்றுவிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராஜவேல் என்னுடைய தகப்பனாருக்கு கொடுத்த ஆவணம் போர்ஜரியான ஆவணம் என்று வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் இதுநாள் வரை ஜெய்சங்கர், ராஜவேல் பெயரில் உள்ள கிரைய ஆவணம் என் கைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் அசல் ஆவணத்தை கொடுத்துவிட்டு அடமான பத்திரம் செய்து அதன் பிறகு அந்த அடமான பத்திரம் ரத்து செய்யப்பட்டு அசல் ஆவணம் அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டுவிட்டது என்றும், அதை மறைத்து நான் தவறான ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே தான் அந்த ஆவணத்தின் அசல் ஆவணம் பிரதிவாதியிடம் உள்ளது என்றும், அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது, வழக்கறிஞருக்கு தான் தெரியும், வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி தன்னுடைய எதிர்வழக்குரையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றும், அதை நான் அறிந்துகொள்ளாமல் சாட்சியம் அளிப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. இன்றைய தேதி வரை நான் சுவாதீனத்தில் இல்லை என்றும், பட்டாவை மாற்றி கொண்டு சுவாதீனத்தில் உள்ளதாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல, இன்றைய தேதிவரை நான் சுவாதீனத்தில் உள்ளேன். சுவாதீனத்தில் இல்லாததால் சொத்து எந்த இடத்தில் உள்ளது என்று என்னால் குறிப்பிட்டு

சாட்சியம் அளிக்க இயலவில்லை என்றால் சரியல்ல, சாட்சியம் அளித்துள்ளேன். 2003லிருந்து சொத்தை நான் அனுபவிப்பதாக இருந்தால் சொத்திற்கான செக்குபந்தி சரியாக சொல்லியிருக்க முடியும் என்றும், அவ்வாறு நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லாததால் செக்குபந்தியை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லாததால் தென்னை மரம் இருப்பதை மறைத்து கரம்பாக இருப்பதாக தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே, நான் கோரிய நிவாரணம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரிடம் நான் ஆட்சேபனை மனு கொடுத்துவிட்டு தற்பொழுது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் என்னுடைய வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து முழுவதும் 2ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது, என்னுடைய அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிடுவதில் எனக்கு எதுவும் ஆட்சேபனை இல்லை என்றால் இல்லை.

வாதி தரப்பில் வா.சா.ஆ.2 ஆவணமானது அசல் என்று பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யும்பொழுது குறிப்பிடப்பட்டுள்ளது. அதை குறித்து நீதிமன்றமும் அந்த ஆவணம் அசல் என்று வா.சா.1-ன் முதன்மை விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின்போது அந்த ஆவணமானது சான்றிட்ட நகல் என்று வழக்கறிஞருக்கும், நீதிமன்றத்திற்கு தெரியவந்ததால் வாதி தரப்பு வழக்கறிஞர் குறிப்பாணையின் மூலம் வா .சா.ஆ.2 ஆனது அசல் அல்ல சான்றிட்ட நகல் என்று நீதிமன்றத்திற்கு தெரிவித்ததன் அடிப்படையில் வா .சா.ஆ.2 ஆவணம் சான்றிட்ட நகல் என்று குறியீடு செய்யப்படுகிறது.

**மறு விசாரணை:-** இல்லை.